# குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறைகள் - தாள் – II

## ஸ்கின்னரின் கற்றல் கட்டுப்பாடுகள்

* கற்பவரின் செயலை வலுப்படுத்திட ஒரு தூண்டல் இருத்தல் வேண்டும்.

* கற்பவர் செயலை வெளிப்படுத்தியவுடன் அத்தூண்டல் வழங்கப்படுதல் வேண்டும்.

* செயல் வெளிப்பட்டு ஒவ்வொரு முறையும், அத்தூண்டல் தொடர்ந்து பலமுறை வழங்கப்படுதல் வேண்டும்.

**உட்காட்சி வழிக் கற்றல்** - **Learning by Insight**

* முதன்முதலில் வெளியிட்டவர் - கோ.ஃஹலர்

* இவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர்.

* கெஸ்டால்ட் எனும் உளவியல் பிரிவைச் சேர்ந்தவர்.

* சுல்தான் எனும் மனிதக் குரங்கை வைத்து சோதனை செய்தார்.

* கற்றல் என்பது வலுவூட்டும் தூண்டலால் நிகழும் நடத்தை அல்ல என்பதை கோ.ஃஹலரின் கருத்தாகும்.

* பிரச்சனைக்குரிய தீர்வு திடீரென சில உண்மைகளின் புலன் காட்சின் அடிப்படையில் தோன்றுவது. கோ.ஃஹலரின் உட்காட்சி எனப்படும்.

* இதன் அடிப்படையில் அமைவது மனிதக் கற்றலும், விலங்குக் கற்றலும் ஆகும்.

* கூண்டில் உள்ள பெட்டிகளை உட்காட்சி மூலம் அடுக்கியும், குச்சிகளை இணைத்தும் வாழைப்பழத்தை சுல்தான் என்னும் குரங்கு எடுத்தது.

**உட்காட்சி கற்றலை பாதிக்கும் காரணிகள்**

1.கற்பவரின் நுண்ணறிவு

2.முன் அனுபவங்கள்

3.பிரச்சனை தோன்றும் முறை

4.ஆரம்ப முயற்சி

**கற்றல் மாற்றம் (அ) பயிற்சி மாற்றம்** - **Transfer of Learning**

* முன்பு கற்ற ஒன்று தற்போது ஒன்றினில் மாற்றத்தை ஏற்படுத்துவது கற்றல் மாற்றம் எனப்படும்.

* முன்பு கற்றலைத் தற்போது கற்றுக் கொளவதிலும், தற்போது கற்கின்ற ஒன்று முன்பு கற்றதிலும் சில விளைவுகளை ஏற்படுத்துவது கற்றல் விளைவு எனப்படும்.

* ஒரு கற்றல் நிகழ்வில் பெறப்பட்ட அறிவு, செயல்திறன், பழக்க வழக்கங்கள், மனப்பான்மை போன்ற எந்த அளவைக் கூறும் வேறொரு கற்றல் நிகழ்வுக்கு எடுத்துச் * செல்லப்பட்டு தாக்கத்தை ஏற்படுத்துவதே கற்றல் மாற்றம் எனப்படும்.

* கற்றல் மாற்றத்தின் வகைகள் - Types of Transfer of Learning

**கற்றல் மாற்றம் 3 வகைப்படும்.**

**1. நேரடிக் கற்றல் மாற்றம் (Positive Transfer)**

* முன்பு கற்ற ஒரு பாடம் (அ) செயல் வேறொரு புதிய பாடத்தினை கற்க உதவுவது நேரடிக் கற்றல் மாற்றம் எனப்படும். (எ.கா. டென்னிஸ் விளையாடக் கற்றவனுக்கு கைப்பந்தாட்டம் விளையாட கற்பது எளிதாக அமைவது.)

**2. எதிர்மறைக் கற்றல் மாற்றம் - Negative Transfer**

* முன்பு கற்ற ஒரு பாடம் (அ) செயல் வேறொரு பாடம் (அ) செயலை கற்க தடையாக அமைவது. (எ.கா. பிறமொழிகளைக் கற்பதில் தாய்மொழியின் பாதிப்பு.)

**3. பூச்சிய, சூன்ய கற்றல் மாற்றம் - Zero Transfer**

* முன்பு கற்ற ஒரு பாடம் (அ) செயல் வேறொரு பாடம் (அ) செயலை கற்கும்போது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. (எ.கா. கணித அறிவும் இசையில் உள்ள புலமையும்.)

**பின்பற்றல் வழிக் கற்றல் - Learning by Imitation**

* பாண்டுரா எனும் உளவியல் அறிஞர் வெளியிட்டார்.

* பிறரது நடத்தையைப் பார்த்து அதே போன்று தங்களுது நடத்தையினை மேற்கொள்ளுதல். (எ.கா. குழந்தைகளின் மொழிவளர்ச்சி)

* வேறொருவரின் கற்பனைப் படைப்பை நாமும் உணர்ந்து அனுபவித்து பின்பற்றும் ஆக்கக் கற்பனை எனப்படும்.

**கற்றல் மாற்றத்திற்கான கோட்பாடுகள்**

1.முறையான கட்டுப்பாட்டுக் கொள்கை (அ) மனக் கட்டுப்பாட்டு கொள்கை - Theory of Formal Disciplinar

* கற்கும்போது என்ன கற்றுக் கொள்கிறோம் என்பதை விட எவ்வாறு கற்றுக் கொள்கிறோம் என்பது முக்கியம். அதன் அடிப்படையில் அமைந்ததே இக்கொள்கை.

* சில அடிப்படைப் பாட் இயல்புகளைக் கற்பது மற்ற எல்லாப் பாட இயல்புகளையும் எளிதில் படிக்க வழிகோலும்.

* இக்கோட்பாட்டை கிரேக்க அறிஞர் பிளாட்டோ முன்வைத்துள்ளார்.

* மனக்கட்டுப்பாட்டுக் கொள்கையை உண்மையென வாதிட்டார் வில்லியம் ஜேம்ஸ்.

**2. தார்ண்டைக்கின் ஒத்தகூறு கோட்பாடு - Theory of Identical Elements**

* பொருட்கள், நிகழ்ச்சிகள், செயல்கள் மற்றும் பாடங்கள் இடையே ஒரே மாதிரி ஒத்த குணங்கள் இருக்கும்போது எளிதில் கற்றல்மாற்றம் ஏற்படுகிறது.

* இக்கோட்பாட்டை ஆதரித்தவர்கள்: தார்ண்டைக், வுட்வொர்த்.

www.Padasalai.Net

* இக்கோட்பாட்டின்படி உண்மைத்தன்மையை விளக்க முடியாதவர் - க்ளென்.

**3. பொதுமைப்படுத்துதல் கொள்கை - Theory of Generalization**

* சி.ஹெச்.ஜட் என்பவரால் 1908ல் வெளியிடப்பட்டது

* பொதுவான தன்மையுடைய செயல்கள் மற்றும் பாடங்கள் இடையே எளிதில் கற்றல் மாற்றம் நடைபெறுகிறது.

* ஜட்டின் கொள்கைப்படி பள்ளிப்படிப்பில் குறிப்பிட்ட பழக்க வழக்கங்களை கற்பதைவிட, பயனுள்ள பல பொது விதிகளை கற்பிக்க வேண்டும்.

**4. தொடர்பு மாற்றக் கோட்பாடு -Theory of Transposition**

* கெஸ்டால்ட்(Gestalt) என்பவரால் வெளியிடப்பட்டது.

* புதிய பொருட்கள், செயல்கள், நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து ஏற்படுகிறது. புதிய சூழ்நிலையில் முடிவு காண பயன்படுத்தும்போது கற்றல் மாற்றம் ஏற்படுகிறது.

* ஒரு நிலையில் காணப்படும் பண்புகளை வேறொரு நிலைமைக்கு மாற்றும் பயிற்சியே மாற்றத்தின் அடிப்படை.

* தொடர்பு மாற்றக் கோட்பாட்டின் அடிப்படை - உட்காட்சி (Insight)

* இவை மாற்றியமைத்தல் சோதனைகள் எனப்படும்.

* காக்னே பயிற்சி மாற்றத்தை 2 வகையாகப் பிரிக்கின்றார்.

* பக்க மாற்றம் - நேரடியாக பிரச்சனைக்கு விடைகாண்பது.

* செங்குத்து மாற்றம் - புதிய முறையில் விடை காண்பது.

**5. குறிக்கோள் கோட்பாடு - Theory of Ideals**

**டபுள்யு.சி.பேக்லி**

* கற்க நாம் கையாளும் முறைகளை குறிக்கோள் நிலைக்கு உயர்த்தினால் நாம் எதைக் கற்கத் தொடங்கினாலும் பயன்படும்.

**காக்னே படிநிலைக் கற்றல் கோட்பாடு - Theory of Hierarchial Learning**

* ராபர்ட் எம்.காக்ளே, அமெரிக்க நாட்டு உளவியல் அறிஞர்.

* பள்ளிக் குழந்தைகள் எவ்வாறு கற்கின்றனர் என்பதை விளக்க ஒரு கற்றல் கோட்பாட்டை உருவாக்கினார். அது அடுக்குக் கற்றல் கோட்பாடு எனப்படும்.

* அடுக்குக் கற்றல் பலபடி நிலைத்தன்மை உடையது.

* உயர்நிலையில் உள்ள கற்றல் நிகழ வேண்டுமெனில் அதன் கீழ்நிலையில் உள்ள கற்றல் வகைகளை நன்கு கற்றுத் தேர்ந்திருப்பது அவசியம்.

www.Padasalai.Net

* கற்றல் என்பது நடத்தையும், சிந்தனையும் உள்ளடக்கிய ஒரு செயல்.

**காக்னேயின் கற்றல் பாதை**

* குறியீட்டுக் கற்றல்

* தூண்டல்-துலங்கள் கற்றல்

* தொடர் செயல் கற்றல்

* சொல் இணைத்துக் கற்றல்

* வேறுபடுத்திக் கற்றல்

* கருத்துமைக் கற்றல்

* விதியைக் கற்றல்

* பிரச்சனையைத் தீர்க்கக் கற்றல்

**நினைவு - Remembering**

* நாம் கற்ற விசயங்களை மனதில் தங்க வைத்து தேவைப்படும் போது பயன்படுத்த உதவுவது.

* நமது சிந்தனை மற்றும் காரண காரியங்களை ஆராய்வது நினைவைப் பொறுத்தே அமையும்.

* சிறப்பான கற்றல் அமைய நல்ல நினைவு அவசியம்.

**நினைவு கூர்தலின் படிநிலைகள்**

* உட்வொர்த் என்பவர் 4 படிநிலைகளைக் குறிப்பிடுகின்றார்.

* 1. பகுதிக் குறியீடுகளை வைத்து நினைவு கூர்தல்

* 2.மீண்டும் கொணர்தல்

* 3.அறிந்து கொள்ளுதல்

* 4.திரும்பக் கற்றல்

**நினைவின் வகைகள்**

* 1. புலனறிவு நினைவு

* 2. குறுகிய கால நினைவு - தற்காலிக நினைவு

* 3. நீண்ட கால நினைவு - நிலையான நினைவு

* 4. குறுகிய கால நினைவில் 2 உறுப்புகளை மட்டுமே நினைவில் வைத்திருக்க முடியும்.

**சிறந்த நினைவின் இயல்புகள்**

* விரைவு

* துல்லியம்

* கால அளவு

* எளிதாக வெளிக் கொணர்தல்

* பொருத்தமான, பயன்படுத்தக் கூடிய தன்மை

**நினைவு வீச்சு - Memory Span**

* ஒரு முறை பார்த்தபின், பார்த்த பொருட்களில் எத்தனை பொருட்களை தவறின்றி ஒருவரால் நினைவுபடுத்திக் கூற முடியுமோ அதுவே அவரது நினைவு வீச்சாகும்.

* இதை நினைவு உருளை எனும் கருவியைப் பயன்படுத்தி அறியலாம்.

* நினைவு வீச்சு உடனடி நினைவை சோதிக்கிறது.

* வயது அதிகரிக்க நினைவு வீச்சு அதிகரிக்கிறது.

* 4 (அ) வயது குழந்தைகளின் நினைவு வீச்சு 6 ஆக இருக்கும் ஞாபக சக்தியின் படிநிலைகள்:

* 1. கற்றல்

* 2. மனத்திருத்தல்

* 3. மீட்டுக் கொணர்தல் - ஒப்பித்தல் (அ) தேவைப்படும் போது மீட்டுக் கொணர்வது.

* 4.மீட்டுணர்தல் (அ) மீட்டறிதல் - அடையாளம் காண்பது.

**மறதி - Forgetting**

* நினைவின் எதிர்மறையான செயல்முறையே மறதி

* முன்பு கற்றலில் சிலவற்றையோ அல்லது முழுமையாகவோ நினைவு கூர்தலில் ஏற்படும் நிரந்தரமான அல்லது தற்காலிகமான இழப்பு.

* நமக்கு மறதி ஏற்படக் காரணம் நாம் கற்ற ஒன்று நமது நினைவில் தங்காததே ஆகும்.

**மறதியின் வகைகள்**

1.இயற்கை மறதி - Passive or Natural Forgetting

* இத்தகைய மறதி தூண்டுதலினால் நிகழ்வதில்லை. பல்வேறு காரணங்களால் நிகழ்கின்றது. இது இயற்கை மறதி எனப்படும்.

2. செயற்கை மறதி - Active or Morbid Forgetting

* இத்தைய மறதி மகிழ்ச்சியற்ற அனுபவம் மற்றும் சுயநினைவில்லாத நிலை போன்றவற்றால் நிகழ்கின்றது. இது நசுக்குதல் மூலம் நிகழ்கிறது.

www.Padasalai.Net

**மறதிக்கான காரணிகள்**

* கற்கும் பொழுது போதுமான அளவு மனதில் பதியாமை

* காலம் கடந்து சென்றமை

* தடை, குறுக்கீடு

* அடக்குதல்

* மனவெழுச்சியின் எழுச்சி

* தூண்டலினால் ஏற்படும் மாற்றம்

* உடல் நலமின்மை மற்றும் குறைபாடு உள்ள மனநிலை

**மறுத்தல் கோட்பாடுகள்**

* 1. பயன்பாடுத்தாதன் விளைவாக அழிதல்

* 2. குறுக்கீடு காரணமாக மறத்தல்

**(அ) முன்னோக்கத் தடை**

* ஏற்கனவே கற்ற செயல் தற்போது கற்கும் செயலுக்கு தடையாக அமைவது பெரும்பாலான சமயங்களில் மறதிக்கு காரணமாக அமைகிறது.

* இதனை விவரித்தவர்கள் ஆசுபெல் மற்றும் ஹண்டர்வுட்

**(ஆ) பின்னோக்குத் தடை**

* புதிதாக கற்றுக் கொள்ளும் செயல் ஏற்கனவே கற்றுக் கொண்ட செயலினை நினைவு கூறத் தடையாக அமைவது.

* இதனை விவரித்தவர்கள் முல்லர் மற்றும் பில்சக்கர்.

**மறுத்தல் பற்றிய எபிங்காஸின் சோதனையும், மறுத்தல் வளைகோடும் - Cure of Forgetting**

* எபிங்காஸ் சோதனைப்படி மறத்தல் விகிதம் தொடக்கத்தில் அதிகமாக இருக்கும்.

* காலம் அதிகரிக்க அதிகரிக்க மறத்தல் விகிதம் குறையும்.

* கற்றலில் முதல் ஒரு மணி நேரத்தில் அரை பங்கும், 8 மணி நேரத்தில் 2/3 பங்கும், ஒரு வாரத்தில் 4/5 பங்கும், கற்றவற்றில் மறந்து போகிறது.

* கல்லூரி வகுப்பின் 40 நிமிட சொற்பொழிவிற்குபின் மாணவர்களது நினைவு கூர்தல் 62 சதவீதம், 3 நாட்களுக்குபின் 20 சதவீதம் நினைவு கூர்ந்தனர்.

www.Padasalai.Net

* எபிங்ஹாஸ் 1885ல் மறதி வைளைகோட்டை வெளியிட்டார். இது நினைவிலிருத்தல் வளைகோடு எனவும் அழைக்கப்படும்.

* கற்றல் மறத்தல் விகிதமும்: 20 சதவீதம் நிமிடங்களில், 47 சதவீதம், 1 நாளில் 66 சதவீதம், 2 நாளில் 72 சதவீதம், 6 நாளில் 75 சதவீதம், 31 நாட்களில் 79 சதவீதம்.

*** முயன்று தவறிக் கற்றல் கோட்பாடு** - இ.எல்.தார்ண்டைக் - சோதனை.- பூனை - சிக்கலறை

*** ஆக்க நிலையிறுத்தல் கற்றல் கோட்பாடு** - ஐ.பி.பாவ்வோல் சோதனை.- நாய் - உமிழ்நீர் சுரத்தல்

*** செயல்பட்டு ஆக்க நிலை கற்றல் கோட்பாடு** - பி.எப்.ஸ்கின்னர் - சோதனை - எலி, புறா - சோதனை

*** உட்காட்சி வழி கற்றல் கோட்பாடு** - கோஹலர் மனிதக் குரங்கு சோதனை

*** களக் கற்றல் கோட்பாடு - சூர்த் லெவின்** - சோதனை வாழ்க்கை வெளி

**கற்றல் கோட்பாடு - Learning Theories**

* முயன்று தவறிக் கற்றல் கோட்பாடு

* ஈ.எல்.தார்ண்டைக் என்பவரால் கண்டறியப்பட்டது.

* பூனையை வைத்து சிக்கலறை பரிசோதனை செய்தார்.

* சிக்கலறையில் பசி என்பது ஊக்குவித்தல்: மீன் என்பது இலக்கு.

* பல தவறான முயற்சிகளுக்கு பின் பூனை இலக்கை அடைந்தது.

* முயற்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது தவறான துலங்களின் எண்ணிக்கை குறைந்து சரியான துலங்கல் உறுதி செய்யப்படுகிறது.

**உட்காட்சி வழிக்கற்றல்**

* ஜெர்மனியை சேர்ந்த உளவியல் அறிஞர்களால் உருவாக்கப்பட்டது.

* கெஸ்டால்ட் என்பதன் பொருள்: முழுமை

* கெஸ்டால்ட் கோட்பாட்டாளர்கள்: உல்ப்ஹங கோஹலர், குர்த் கோஃகா, மேக்ஸ் வெர்திமர்

* கேனரி தீவுகளில் கோஹலர் மனிதக் குரங்குகளின் மீது இவ்வாராய்ச்சியை மேற்கொண்டார்.

* பசியுள்ள, கூண்டில் விடப்பட்ட குரங்கு உட்காட்டி அல்லது உள்ளொலி மூலம் குச்சியால் பழத்தை அடித்து உண்டது.

* உண்மைகள் புலன்காட்சி வழியே தோன்றுவது உட்காட்சி என்ப்படும்.

* உட்காட்சி வழிக்கற்றலில் கற்றல் என்பது நுண்ணறிவை சார்ந்தது.

* இங்கு விவேகத்தின் அடிப்படையில் கற்றல் உள்ளது.

* உட்காட்சி வழிகற்றல் அணுகுமுறைகள்: தொகுத்தறிதல் முறை, மொத்தக்கூறு அணுகுமுறை.

* உட்காட்சி வழி ஏற்படும் மறத்தலுக்கு காரணம்: குறுக்கீடு (அ) தடை

* கற்றல் நுண்ணறிவு, அனுபவத்தின் மூலம் ஏற்படுகிறது.

**அறிவுப்புலக் கோட்பாடு**

* கோஹலர் முழுமைக் காட்சி கோட்பாடு

* குர்ட் லெவின் அறிவிப்புலக் கோட்பாடு

* டால்மன் கோட்பாடு

**செயல்படு ஆக்க நிலையிறுத்தல் கோட்பாடு**

* அமெரிக்க உளவியல் அறிஞர் பி.எப்.ஸ்கின்னர் மூலம் இக்கோட்பாடு ஏற்படுத்தப்பட்டது.

* இது வலுவூட்டல் கோட்பாடு, கருவிசார் ஆக்க நிலையிறுத்தம் எனவும் அழைக்கப்பெறும்.

* ஸ்கின்னர் சோதனைகள் மேற்கொண்ட உயிரிகள்: எலி, புறா.

* ஸ்கின்னரின் கோட்பாட்டில் முக்கியமானது சரியான துலங்கலைக் கொடுப்பது.

* இங்கு துலங்கல் ஆக்க நிலையிறுத்தம் செய்யப்படுகிறது.

* இதில் துலங்கலால் தூண்டல் வலுவூட்டமாகக் கிடைக்கிறது.

* மனித நடத்தைகள் பற்றிய சோதனைக்கு இக்கோட்பாடு அடிப்படையாக அமைகின்றது.

* ஸ்கின்னர் உருவாக்கிய கற்பித்தல் முறை: திட்டமிட்டுக் கற்பித்தல் (அ) திட்டமிட்டுக் கற்றல்.

* செயல்படு ஆக்கநிலையிறுத்தம் மூலம் நேர் வலுவூட்டிகள் மூலம் பயத்திற்கான காரணிகளை நீக்க முடியும்.

* இவரது கோட்பாடு ஸ்கின்னேரியன் கற்றல் எனப்படும்.

* இதில் தூண்டல் - துலங்கல் விளைவு விதியின் அடிப்படையில் அமைகிறது.

* செயல்படு ஆக்க நிலையிறுத்தலில் கற்றல் துலங்கலின் அடிப்படையில் அமைகிறது.

* இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட துலங்கல் நடைபெறுகிறது.

* இதில் கற்றல் சிந்தனையின் அடிப்படையில் அமைகிறது.

**தார்ண்டைக்கின் கற்றல் விதிகள்**

* ஆயத்த விதி

* விளைவு விதி

* பயிற்சி விதி

* குறிப்பிட்ட செயலைச் செய்ய உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பது ஆயத்த விதி.

* தூண்டல் துலங்களுக்கிடையிலான பிணைப்பைப் பற்றிக் கூறுவது விளைவு விதி, பயன் விதி

* தூண்டல் துலங்கல் பிணைப்பு திரும்பத்திரும்ப நிகழுவதன் மூலம் வலு அதிகரிக்கும் என்பது பயிற்சி விதி.

* முயன்று தவறிக் கற்றல் முறையைப் பயன்படுத்தி எண் கணித கணக்குகள் தீர்க்கப்படுகின்றன.

**கற்றல் கோட்பாடுகள்**

தூண்டல் துலங்கல் கோட்பாடு:

* பாவ்லோவ் ஆக்க நிலையுறுத்தம்.

* ஸ்கின்னர் செயல்பட ஆக்க நிலையிறுத்தல்

* தார்ண்டைக் முயன்றுதவறிக் கற்றல், இணைப்புக் கோட்பாடு.

**ஆக்க நிலையிறுத்தல் கோட்பாடு**

* ரஷ்ய உளவியல் அறிஞர் ஐ.பி.பாவ்லோவ் இச்சோதனையை மேற்கொண்டார்.

* நாயின் மீது சோதனை நடத்தி இக்கோட்பாட்டை உருவாக்கினார்.

* கட்டுப்படுத்தப்பட்ட தூண்டுதலுக்கும் கட்டுப்படுத்தப் படாத துலங்களுக்கும் இடையே உள்ள தொடர்பே ஆக்க நிலையிறுத்தம் எனப்படும்.

* உணவு என்பது கட்டுப்படுத்தப்படாத (அ) இயல்பான தூண்டல் (US)

* உமிழ்நீர் என்பது கட்டுப்படுத்தப்படாத (அ) இயல்பான துலங்கள் (UR)

* மணியோசை என்பது கட்டுப்படுத்தப்பட்ட தூண்டல் (CS)

* கட்டுப்படுத்துதலினால் தனிமனிதனது பயம், குட்டு நம்பிக்கை போன்றவை தவிர்க்கப்படுகின்றன.

* மொழிப்பாடம் கற்பிக்க கட்டுப்படுத்துதல் உதவுகிறது.

* மாண்டிசோரி கல்விமுறை கட்டுப்படுத்துதல் முறையில் அமைந்துள்ளது.

* ஆக்க நிலையிறுத்தலில் அமையும் தூண்டல் - துலங்கல் தொடர்ச்சி விதியின் விளைவாக ஏற்படுகிறது.

* ஆக்க நிளையிறுத்தல் தூண்டல் சார்ந்தது.

www.Padasalai.Net

* தூண்டல் இல்லையென்றால் துலங்கல் ஏற்படாது.

* ஆக்க நிலையிறுத்தலில் தூண்டலில் பதிலீடு செய்யப்படுகிறது.

* ஆக்க நிலையிருத்தலில் கற்றல் இயந்திரத்தனமாக நடைபெறுகிறது

www.Padasalai.Net